**CC.No.306/2016 (JM.No.II, DHARMAPURI)**

**12.06.2026**

**சாட்சிக்கு சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டது. (எதிரி ஆஜர்)**

**PW–3 : திரு.செந்தில்குமார், தலைமை காவலர்**

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது இண்டுர் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். நான் தொப்பூர் காவல் நிலையத்தில் முதல்நிலை காவலராக பணிபுரிந்தபோது 05.03.2026 மதியம் 15.00 மணிக்கு சிறப்பு காவல் ஆய்வாளர் பர்கத் அலி பணியில் இருந்தபோது தருமபுரி அரசு மருத்துவமனையில் இருந்து கிடைத்த தகவலின்பேரில் அரசு மருத்துவமனைக்கு சென்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த அம்பலத்தரசி என்பவரை விசாரித்து புகார் வாக்குமூலம் பதிவு செய்து, அந்த புகார் வாக்குமூலததை சிறப்பு காவல் ஆய்வாளர் பர்கத் அலி அவர்களின் மேற்பார்வைக்கு வைத்தேன். சிறப்பு காவல் ஆய்வாளர் பர்கத் அலி என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்.

<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>

சிறப்பு காவல் ஆய்வாளர் எழுத்துபூர்வமாக உத்தரவு இடவில்லை, வாய் மொழியாக உத்தரவு இட்டார். காவல் நிலையத்திற்கு மதியம் 03.00 மணிக்கு மருத்துவமனையில் இருந்து தகவல் கிடைக்கபெற்றது என்றால் சரியல்ல. அ.சா.1ஐ மதியம் 3.00 மணிக்கு மேல் தான் நான் சந்தித்தேன் என்றால் சரிதான். புகார் வாக்குமூலத்தில் அ.சா.1 பகல் 12.00 மணிக்கு அவரை வந்து சந்தித்து வாக்குமூலம் பெற்றதாக சொல்லியிருந்தால் தவறு என்றால் சரிதான். அ.சா.1ஐ அரசு மருத்துவமனையில் யார் அடையாளம் காட்டினார் என்றால் பெயர் கூப்பிடும்போது கை தூக்கியதின் அடிப்படையில் அடையாளம் கண்டேன். நான் சொன்ன தேதியில் சொன்ன நேரத்தில் அரசு மருத்துவமனைக்கு சென்று அ.சா.1ஐ பார்க்கவில்லை என்றாலும், அதனால் தான் விபத்து பதிவேட்டில் அனுமதிக்கப்பட்ட தேதியாக 4.3.2016 என்று குறிப்பிட்டுள்ளது என்றாலும், என்னுடைய முதல் விசாரணையில் 5.3.2016 அ.சா.1யிடம் மருத்துவமனையில் வாக்குமூலம் பெற்றதாக நான் கூறியுள்ளேன் என்றாலும், சம்பவம் நடைபெறவில்லை என்றாலும் சரியல்ல. 4.3.2016 தேதியில் டிஸ்சார்ஜ் செய்யப்பட்ட ஒருவரை 5.3.2016 அன்று வாக்குமூலம் பதிவு செய்ய சாத்தியக்கூறு இல்லை என்றாலும், பொய்யாக புனையப்பட்ட வழக்கில் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

SUSHMITHA RAJAMANICKAM

Digitally signed by SUSHMITHA RAJAMANICKAM
Date: 2026.06.12 16:34:13 +0530